# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109773

1/AC/2023/KM

1. District மாவட்டம் : Kanchipuram PS: காவல்நிலையம் VACB Kanchipuram Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 27.02.2023 @ 09.30hrs

2. (i) Act சட்டம்: The prevention of corruption Sections பிரிவுகள்: U/S 7
   (ii) Act சட்டம்: Act, 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 20.02.2023 Date to : நாள் வரை @ 12.30hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.02.2023 Time : நேரம் 08.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.02.2023 Time : நேரம் 08.30hrs P 09.30hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Statement of Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North-west - about 6 KMS,
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி O/o the Automobile Engineer, Govt Workshop, Sirukaveripakkam, Kanchipuram District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Venkatesan (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் S/o Krishnan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age - 50 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Owner of Sri Venkateswara Auto Engineering Works. (g) Address : முகவரி No. 52A, Chennai Bypass Road, Thiruttani, Thiruvallur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Mohan, Automobile Engineer, Govt Automobile Workshop, Sirukaveripakkam, Kanchipuram District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

Seen [signature] 27/02/2023

Seen [signature] 27/2/23.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

PTO

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded Rs. 30,000/- as bribe.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR contents Enclosed with Separate Sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ......R. Geetha...... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................Inspector...... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 27/2/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 27/2/2023
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
27/2/2023 at 12.20hrs.

Name: பெயர் R. Geetha
Rank: நிலை Inspector of police, No. எண் ........
VACB,
Kanchipuram.

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2023/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

பணிந்து அனுப்பப்படுகிறது

இன்று 27.02.2023-ந் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளராகிய நான் ஆஜரில் இருந்தபோது, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, சென்னை பைபாஸ் ரோடு, எண்.52A என்ற முகவரியில் குடியிருக்கும் திரு.K.வெங்கடேசன், வயது-50, த/பெ.கிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலம் பின்வருமாறு, நான், மேற்கண்ட விலாசத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். மேற்படி எனது வீட்டின் தரைதளத்தில் Sri Vekateswara Auto & Engineering Works என்ற பெயரில் வாகனங்கள் பழுதுபார்க்கும் ஒர்க்ஷாப்பை சுமார் 15 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன், மேற்கண்ட எங்களது ஒர்க்ஷாப்பில் கடந்த 01.10.2020 தேதி முதல் 30.09.2022 தேதி வரை தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன பராமரிப்பு துறையிடம் அரசு அங்கீகாரம் பெற்று காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள அரசு துறையைச் சேர்ந்த வாகனங்களுக்கு பழுதுபார்க்கும் பணியினை செய்து வந்தேன். அந்த அரசு அங்கீகார காலம் முடிவடைந்தமையால், எனது ஒர்க்ஷாப்பிற்கு மீண்டும் அரசு அங்கீகாரம் பெறவேண்டி, இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத்துறை, வேளச்சேரி, சென்னை அவர்களிடம் மனு செய்தேன். அதன்பேரில், காஞ்சிபுரம் அரசு தானியங்கி பணிமனையில் பணிபுரியும் AE திரு.மோகன் அவர்கள் தலைமையில் ஆய்வு குழுவினர் திருத்தணியில் உள்ள எனது பணிமனைக்கு வந்து ஆய்வு செய்துவிட்டு, பின்னர் எனது மனு நிராகரிக்கப்பட்டதாக இயக்குநர் வேளச்சேரி அவர்களிடம் இருந்து கடிதம் வரப்பெற்றது. அதன்பின்பு நான் மீண்டும் மறு ஆய்வு செய்ய வேண்டி இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு மனு செய்தேன். அதன்பேரில் மீண்டும் காஞ்சிபுரம் AE திரு.மோகன் அவர்கள் தலைமையில் மீண்டும் ஆய்வு குழுவினர் வந்து ஆய்வு செய்துவிட்டு, பின்னர் இயக்குநர் அவர்களிடமிருந்து எனது மனுவினை மீண்டும் நிராகரிப்பட்டதாக கடிதம் வரப்பெற்றது. அதன்பின்பு நான் கடந்த 29.12.2022 ந் தேதியில் இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, வேளச்சேரி அலுவலகத்தில்

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2023/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

எனது ஒர்க்ஷாப்பிற்கு அரசு அங்கீகாரம் வேண்டி மீண்டும் மனு கொடுத்தேன். அதன்பேரில் AE திரு.மோகன், அவர்கள் தலைமையில் ஆய்வுக்குழு எனது பணிமனைக்கு கடந்த 15.02.2023 ந் தேதி வந்து ஆய்வு செய்துவிட்டு, AE திரு.மோகன் அவர்கள் என்னை காஞ்சிபுரம் சிறுகாவேரிபாக்கத்தில் உள்ள அவரது அலுவலகத்திற்கு வந்து அவரை சந்திக்குமாறு கூறிவிட்டு சென்றார். அதன்பின்பு நான் 20.02.2023 ந் தேதி பகல் சுமார் 12.30 மணிக்கு காஞ்சிபுரம் சிறுகாவேரிபாக்கத்தில் உள்ள அரசு தானியங்கி பணிமனைக்கு சென்று AE திரு.மோகன் அவர்களை சந்தித்து, எனது ஒர்க்ஷாப்பிற்கு அரசு அங்கீகாரம் பெறுவது சம்மந்தமாக கேட்டேன். அதற்கு A.E திரு.மோகன் அவர்கள் எனது ஒர்க்ஷாப்பிற்கு அரசு அங்கீகாரம் வழங்க பரிந்துரை செய்து அறிக்கை அனுப்புவதற்கு, தனக்கு பணம் ரூ.50,000/- தரவேண்டும் என்றும், அவ்வாறு பணம் தந்தால் தான் ஆய்வு அறிக்கை எனக்கு சாதகமாக அனுப்பி வைப்பேன் என்றும் தெரிவித்தார். அப்போது நான் எனது கஷ்டத்தை அவரிடம் எடுத்துக் கூறி, அவ்வளவு பணம் என்னால் தர இயலாது என்று தெரிவித்தேன். அதற்கு அவர் கேட்ட பணம் ரூ.50,000/-த்திலிருந்து ரூ.20,000/-ம் குறைத்துக் கொண்டு பணம் ரூ.30,000/-ம் கொண்டு வந்து அலுவலகத்தில் தன்னை சந்தித்து கொடுக்கும்படியும், அப்போதுதான் அந்த மனுவை பரிந்துரை செய்வேன் என்று தெரிவித்தார். எனக்கு திரு.மோகன், தானியங்கி பொறியாளர் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.30,000/-ம் கொடுக்க விருப்பம் இல்லாததால், நான் அவர் கேட்ட பணம் ரூ.30,000/-ஐ திரட்டுவதற்கு குடும்ப சூழ்நிலை காரணமாக காலதாமதம் ஆகிவிட்டதால், இன்று 27.02.2023-ம் தேதி திரு.மோகன் A.E. அவர்கள் கேட்ட லஞ்சப் பணம் ரூ.30,000/-ஐ எடுத்துக் கொண்டு, திரு.மோகன், தானியங்கி பொறியாளர், தானியங்கி அரசு பணிமனை, காஞ்சிபுரம் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இந்த புகார் வாக்குமூலத்தை கொடுக்கிறேன். மேலும், அவர் மீது தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்பதை தங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன், எனக்கு தமிழ் படிக்க தெரியும், ஆனால் தமிழ் சரிவர எழுத தெரியாத காரணத்தால், நான் தெரிவித்த புகாரை வாக்குமூலமாக காவல் ஆய்வாளராகிய

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2023/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

தாங்கள், நான் சொல்ல சொல்ல அலுவலக கணினியில் டைப் செய்து, பிரிண்ட் எடுத்து அதனை என்னிடம் கொடுத்தீர்கள், நான் அதை படித்து பார்த்தேன், சொன்னபடி சரியாக இருந்தது. SdXXX K.Venkatesan, 27.02.2023.

**Honoured Madam,**

The above statement of complaint was recorded by me on 27.02.2023 between 08.00 hrs and 08.30 hrs, after verifying the antecendents of the accused and credibility of the complainant. I have registered a case in Kanchipuram V&AC, Cr.No.1/AC/2023/KM u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) on 27.02.2023 at 09.30 hrs. The original FIR along with statement of complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Chengalpet. Copies send to Officers concerned and took-up the investigation.

27/2/2023.

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Kanchipuram-631501